
# ஐய்யோ வேண்டாம்!
# இது பிளாஸ்டிக்!

## உங்களுக்கு தெரியுமா?

பிளாஸ்டிக், புதைபடிவ எரிபொருள்* வழித் தோன்றியவை. உண்மையில், பிளாஸ்டிக் ஒரு மலிவான மூலப்பொருள், ஏனெனில், இது, புதைபடிவ எரிபொருள்கள் தொழில்துறையின் துணை தயாரிப்பு**.



நிறம், அமைப்பு, தடிமன் போன்றவைகளுக்காக பிளாஸ்டிக்கில் பல இரசாயனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

ஒருமுறை பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக்குகள் உடனடியாக உபயோகித்து அகற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்டு, பெரும்பாலும் குப்பைத் தொட்டிகள் அல்லது சுற்றுச்சூழலில் கழிவுகளாக முடிகிறது.

*புதைபடிவ எரிபொருள்கள் இயற்கையாகவே பூமியின் மேற்பகுதியில், இறந்த தாவரங்கள் மற்றும் விலங்குகளின் எச்சங்களிலிருந்து உருவாகின்றன. அவை புதுப்பிக்க முடியாத வளங்கள்.

** துணை தயாரிப்பு என்பது வேறு ஏதாவது ஒன்றை உற்பத்தி செய்யும் போது, உருவாக்கப்படுவது ஆகும்.

உயிர்காக்கும் மருந்துகள் முதல் விண்வெளிப் பயணம் வரை, மனிதர்களின் அன்றாட வாழ்வில் எந்தக் காலத்திலும் அசைக்க முடியாத இருப்பை பிளாஸ்டிக் நிலைநிறுத்தியுள்ளது.

உற்பத்தி செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களில் பாதி, கடந்த 15 ஆண்டுகளில் தயாரிக்கப்பட்டவை

1950
2.3 மில்லியன் டன்கள்

2015
448 மில்லியன் டன்கள்

2050
800 மில்லியன் டன்களுக்கு மேல்!

பிளாஸ்டிக்? அருமை அல்ல ☹ ஆனாலும் எவ்வளவு பிளாஸ்டிக் உற்பத்தி செய்கிறோம் !

# பிளாஸ்டிக் எல்லா இடங்களிலும் உள்ளது

நாம் சுவாசிக்கும் காற்றில் இருக்கிறது

விஞ்ஞானிகள் நம் இரத்தத்தில் கண்டுபிடித்துள்ளனர்



உணவுகளில் காணப்படுகிறது



குடிநீரில் காணப்படுகிறது

எவரெஸ்ட் சிகரத்திலிருந்து மரியானா அகழி வரை எல்லா இடங்களிலும் இருக்கிறது!



தாய்ப்பாலில் காணப்படுகிறது

# என்றென்றும் பிளாஸ்டிக்!

பிளாஸ்டிக், அவற்றில் உள்ள சேர்க்கைகளினால் வலுவாகவும், நெகிழ்வாகவும், நீடித்ததாகவும் இருக்கின்றது. ஆனால், பிளாஸ்டிக் குப்பையாகும்போது, இந்த சேர்க்கைகள் அவற்றின் ஆயுளை நீடிக்கும். பிளாஸ்டிக் சிதைந்து போக


**4 0 0 ஆ ண்டு க ள் ஆ க லா ம்**

அவை காணாமல் போனதாகத் தோன்றினாலும், வெறும் மைக்ரோபிளாஸ்டிக்காக உடைந்திருக்கும்.

1.

நம்மை சுற்றி மிதக்கின்ற இவையெல்லாம் என்ன?

அதற்கு பெயர் பிளாஸ்டிக் என்று அம்மா என்னிடம் சொன்னார்.



2.

இதை சாப்பிடலாமா? மம் மம்..

வேண்டாம்!! அது உன்னை சிக்க வைத்து, கொன்றுவிடும்! ப்ளூயி மற்றும் மிஸ்டர் நண்டுக்கு அது என்ன செய்திருக்கிறது என்று பாரு!



காப்பாற்றுங்கள்! நான் அதை சாப்பிட்டுவிட்டேன். நான் இறப்பது போல் உணர்கிறேன்!



காப்பாற்றுங்கள்! நான் சிக்கிக்கொண்டேன்!



3. இதையெல்லாம் செய்வது யார்?

**மனிதர்கள்தான்!!**
பிளாஸ்டிக் அவர்களை நோயாளியாக்கியுள்ளது. அது அவர்களது மண், காற்று மற்றும் நீரை மாசுப்படுத்தியுள்ளது.



ஆனாலும், இன்னும் அதிகமாக தயாரித்து, நமது வீடுகளுக்குள் தூக்கி எறிந்து கொண்டே இருக்கிறார்கள்.

குழந்தைகளே, தயவுசெய்து அவர்களை பிளாஸ்டிக்கை நிறுத்தச் செய்வீர்களா??

4.



இதுவே நம் அனைவருக்கும் சிறந்தது.

# மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமா?

## இதோ இப்படி!





## மறுத்தல்

ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கிற்கு 'NO' சொல்லுங்கள். ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கில் சுற்றப்பட்ட பொருட்கள் வாங்குவதை தவிருங்கள். பிளாஸ்டிக் பாட்டில்கள், கேரி பேக்குகள் (carry bags) போன்றவை.

## உபயோக மாற்றம்

பொருட்களை தூக்கி எறிவதற்குப் பதிலாக, அதன் உபயோக மாற்றத்தினை கண்டுபிடியுங்கள்! பாட்டில்களை செடிகள் வைக்க பயன்படுத்தலாம். அட்டைகள் (wrappers) கொண்டு கலையை உருவாக்குங்கள். படைப்பாற்றலோடு இருங்கள்!





## பயன்பாட்டைக் குறைத்தல்

நீங்கள் புதிய பொருட்களை வாங்க விரும்புகிறீர்களா? நீங்கள் வாங்குவதை குறைக்க முடியுமா? நிறைய பொருட்கள் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கினால் பேக் செய்யப்படுகின்றன - அதனால் குறைந்த அளவில் பொருட்களை வாங்குவது நல்லது!



## மறு சுழற்சி

சில பிளாஸ்டிக்குகளை மறுசுழற்சி செய்யலாம். இவற்றை தனியே வைத்து, அருகில் உள்ள "காயலாங்கடை"யில் கொடுத்தால், அவர்கள் மறுசுழற்சிக்கு அனுப்புவார்கள்.

## மறு பயன்பாடு

நிறைய பொருட்கள் நீண்ட காலம் நீடிக்கும், மற்றும், மீண்டும் பயன்படுத்தப்படலாம் - உதாரணமாக, துணியால் மற்றும் உலோகத்தினால் செய்யப்பட்ட பொருட்கள். பிளாஸ்டிக்கை விட இந்த பொருட்களால் செய்யப்பட்ட பொருட்களை தேர்வு செய்யுங்கள்.

தமிழக அரசின் 'மீண்டும் மஞ்சப்பை' திட்டம் மக்களை துணிப்பைகளை தேர்வு செய்ய ஊக்குவிக்கிறது. எங்கே உங்கள் மஞ்சப்பை?




CAG
Citizen consumer and civic Action Group

**Citizen consumer and civic Action Group (CAG)**
**No.103 (First Floor), Eldams Road, Teynampet,**
**Chennai 600 018.**
**www.cag.org.in | T: +91(44) 2435 4458 | 2435 0387**
**Email helpdesk@cag.org.in**